முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.99/2008** **DW: 4** **22.07.2026**

2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 22ம் நாள் பிரதிவாதி தரப்பு 4ம் சாட்சியாகிய ரவி என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10–வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரவி | வயது | 51 |
| த/க. பெயர் | பாலகிருஷ்ணன் | தொழில் | |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | போத்திரமங்கலம் |
| மாவட்டம் | கடலூர் | | |

## <u>குறுக்கு விசாரணை</u>

எனது பூர்வீகம் போத்திரமங்கலம் என்பதற்கு நான் ஆதரங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளளேனா என்றால் இல்லை, வீட்டில் வைத்துள்ளேன். நான் போத்திரமங்கலம் கிராமத்தை சேர்ந்திருந்தால், தெரு பெயர் மற்றும் கதவு எண் ஆகியவற்றை எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருப்பேன் என்றும் போத்திரமங்கலத்தில் இல்லாததால் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் எனது ஆதார் அட்டையையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

நான் வழக்குச் சொத்து சம்மந்தமான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தை வழக்கறிஞர் தயாரித்து அதில் நான் கையொப்பம் மட்டும் போட்டேன் என்றால் சரிதான், (பிரதிவாதி நீதிமன்றத்தில் இருந்து கொண்டு, சாட்சியிடம் சொல்லிக்கொண்டதன் அடிப்படையில் சாட்சி என்னிடம் படித்து காண்பித்தார் என்று கூறினார்).

இதற்கு முன்பு நடந்த வழக்கின் விபரம் தெரியுமா என்றால் தெரியும், அந்த வழக்கு என்ன ஆகிவிட்டது என்றால் தெரியாது. நான் வழக்கு நடந்த விபரம் மட்டும் தெரியும் என்று சொல்லி, வழக்கு முடிந்த விபரம் தெரியாது என்பதால், அத்தகைய விபரம் நம்பகத்தன்மை இல்லை என்றால் சரியல்ல. எதிர்வாதி வளர்மதி என்னை சாட்சியளிக்க சொன்னதன் அடிப்படையில் நான் வழக்கின் விபரமே தெரியாமல், நீதிமன்றத்தில் பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல, எனக்கு அங்கு வீடு உள்ளது. எனது வீடு இருப்பதற்கான வீட்டு வரி ரசீதுகளை நான் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு வீடே கிடையாது என்றும் இருந்திருந்தால், நான் ரசீதுகளை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கின் விபரம் நேரிட்டு தெரியாது என்றும் எதிர்வாதிக்கு அனுசரணையாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.
குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI

Digitally signed by N SHALINI
Date: 2026.07.22 15:15:48 +0530

Principal District Munsif,(F.A.C),
Tittagudi.